# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2276/04 - 2022 අප්‍රේල් මස 18 වැනි සඳුදා - 2022.04.18

*2276/04 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 18 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 21/78* (XV) (ஆ)

***1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்***

*21 ஆம் பிரிவுடனும் 139 ஆம் பிரிவுடனும் சேர்த்துவாசிக்கப்படும் 27(1) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27(1) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, கல்வி அமைச்சர் தினேஸ் குணவர்த்தன ஆகிய நான், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரைமீது, மேற்கூறப்பட்ட சட்டத்தின் 139 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பயனைக்கொண்டு சொல்லப்பட்ட சட்டத்தின் 21 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றாகக் கருதுகின்றதான இலங்கை, கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பீடங்களையும் துறைகளையும் குறித்துரைக்கின்றதும், (காலத்திற்குக்காலம் திருத்தப்பட்டவாறான) 2006 யூன் 9 ஆந் திகதிய 1448/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைக்கான அட்டவணையை, (2027 யூன் 30 ஆந் திகதிய 2025/39 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட) அவ்வட்டவணையின் நிரல்* I *இல் காணப்படுகின்ற "கலைப் பீடம்" என்னும் விடயத்திற்கு நேரொத்ததாக அதன் நிரல்* II *இல் காணப்படுகின்ற "11. ஆங்கில மொழிக் கற்பித்தல் துறை" என்னும் பதிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பதிவைச் சேர்ப்பதன்மூலம் இக்கட்டளையினால் திருத்துகின்றேன் :-*

*"12. தகவல் தொழில்நுட்பவியல் துறை"*

**தினேஸ் குணவர்த்தன,**
*கல்வி அமைச்சர்.*

கொழும்பு,
*2022, ஏப்பிறல் 08.*

EOG *04 - 0067*


1A - PG 5815 — 611 (2022/04)

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*